1972 ஆகஸ்ட் 21]

THIRU K. M. SUBRAMANIAM: Are the Government aware that during the last 10 years or so, right from 1959 to 1972, only 10,000 houses have come up in the City of Madras and it is due to the high incidence and increase in annual valuation of houses and rate of property tax by the Corporation?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, 10 ஆயிரம் வீடுகள்தான் கட்டப்பட்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். அதைப்பற்றிய ஸ்டாட்டிஸ்டிக்ஸ என்னிடத்திலே இல்லை, தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

Loans for Tourism Development Projects

* 231 Q.—THIRU R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether the Department of Tourism has issued loans for Tourism projects in this State for private parties; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்:

(a) No.

(b) Does not arise.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவரவர்களே, சுழலும் ஹோட்டல் எந்த நிலையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, சுழலும் ஹோட்டல் ஒன்று இப்பொழுது அண்ணா நகரில் அண்ணா டவரில் கட்ட வீட்டு வசதி வாரியம் ஏற்பாடு செய்து வருகிறது. தனிப்பட்ட முறையில் நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த. சோணையா: தலைவரவர்களே, இந்த சுழலும் ஹோட்டல் என்பது குடை ராட்டினம் போல சுற்றுமா அல்லது தலைகீழ் ராட்டினம் போன்று சுற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அது கட்டப்பட்ட பிறகு மாண்புமிகு அங்கத்தினர் அவர்களை அதில் உட்கார வைத்துக் காட்டுகிறேன். அதுவரையில் அவர் பொறுத்திருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.